இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 14.04.2026

பா.ஜ.க. கொண்டு வரும் பேராபத்து!

மேற்கு வங்க மாநிலத்துக்கான தேர்தல் அறிக்கையை பா.ஜ.க. வெளியிட்டு உள்ளது. இதனை உள்துறை அமைச்சர் அமித்ஷா வெளியிட்டுள்ளார். **'மேற்கு வங்க மாநிலத்தில் ஆட்சிக்கு வந்த ஆறு மாதத்தில் பொது சிவில் சட்டத்தை அமல்படுத்துவோம்'** என்று பா.ஜ.க. வாக்குறுதி அளித்துள்ளது.

மேற்கு வங்காளத்தில் முர்ஷிதாபாத் நகரில் நடைபெற்ற தேர்தல் பரப்புரை பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் மோடி அவர்கள், **"ஊடுருவல்காரர்களை பாதுகாக்க திரிணாமுல் காங்கிரஸ் கட்சி திருப்திப்படுத்தும் அரசியலைச் செய்து வருகிறது. நாட்டின் பாதுகாப்பில் சமரசம் செய்து கொள்ள முடியாது. திருப்திப்படுத்தும் அரசியலுக்கு முடிவுரை கட்ட மேற்கு வங்கத்தில் பொது சிவில் சட்டத்தை அமல்படுத்துவதில் பா.ஜ.க. உறுதியாக இருக்கிறது"** என்று பேசி இருக்கிறார்.

பா.ஜ.க.வின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று பொது சிவில் சட்டம் ஆகும். பல்வேறு இனங்கள், மொழிகள், பண்பாடுகள், பழக்க வழக்கங்கள் கொண்ட மக்கள் வாழும் நாடு இது. இங்கு பலதரப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பு தரும் சட்டங்கள் இருக்கின்றன. இவை அனைத்தையும் நீக்கிவிட்டு அனைவருக்கும் பொதுவான ஒரு சட்டத்தை கொண்டு வரத் துடிக்கிறது பா.ஜ.க.

திருமணம், விவாகரத்து, சொத்துரிமை, தத்தெடுப்பு ஆகியவை பொதுவாக அனைவருடனும் கலந்தது. ஆனால் இவை ஒரே மாதிரியாக நடத்தப்படுகிறதா என்றால் இல்லை. இந்துக்கள் அனைவரும் ஒரே முறைப்படி திருமணம் செய்வது இல்லை. மாநிலத்துக்கு மாநிலம் வேறுபடுகிறது. ஒரே மாநிலத்துக்குள் பல்வேறு வகையில் திருமணங்கள் நடக்கின்றன. குடும்பம் என்ற அமைப்பு முறை, பொதுப்பண்பாட்டுடன் இயங்குவது இல்லை.

இந்திய அரசமைப்புச் சட்டம் பல்வேறு சிறப்புரிமைகளை, பல்வேறு வகைப்பட்ட மக்களுக்கு வழங்கி இருக்கிறது. இது பன்முகத் தன்மையைக் காக்க வழங்கப்பட்ட உரிமை ஆகும். அதை குலைக்கப் பார்க்கிறது பொது சிவில் சட்டம். இசுலாமியர்கள், கிறிஸ்தவர்கள் தங்களுக்கென தனித்தனி திருமணச் சட்டங்களை வைத்திருப்பதுதான் பா.ஜ.க.வை உறுத்துகிறது. அனைத்து மதங்களின் தனிநபர் சட்டமும் இவர்களுக்கு எரிச்சல் தருகிறது. அதை எடுக்க வேண்டும். அதுதான் இவர்களது உண்மையான நோக்கம்.

இது தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் தொடர்ந்து நடந்து வருகிறது. 2016 ஆம் ஆண்டு ஒன்றிய சட்டத் துறை அமைச்சகம், சட்ட ஆணையத்துக்கு ஒரு கோரிக்கை வைத்தது. பொது சிவில் சட்டத்தை அமல்படுத்துவதற்கான ஆலோசனைகளைக் கேட்டது. 2018 ஆம் ஆண்டு சட்ட ஆணையம் தனது கருத்தைத் தெரிவித்தது. பொது சிவில் சட்டம் தேவையில்லை என்று சொன்னது.

உத்தரகாண்ட் மாநில பா.ஜ.க. அரசு பொது சிவில் சட்டத்தை 2024 ஆம் ஆண்டே நிறைவேற்றிவிட்டது. இந்தியாவில் இந்தச் சட்டத்தை நிறைவேற்றிய முதல் மாநிலம் இதுதான். அனைத்து மதத்தினருக்கும் பொது சிவில் சட்டத்தை உருவாக்கிய உத்தரகாண்ட் அரசு, பழங்குடியின மக்கள் இந்த மசோதாவுக்குள் வர மாட்டார்கள் என்ற சலுகையை வழங்கியது. ஏனென்றால் பழங்குடியினர் இதனைக் கடுமையாக எதிர்ப்பார்கள் என்று தெரியும். இத்தகைய சட்டத்தை அமல்படுத்த விடமாட்டார்கள் என்று தெரியும். அதனால் தப்பித்துக் கொண்டது உத்தரகாண்ட் பா.ஜ.க. அரசு. பழங்குடியினரை மட்டும் விலக்கும் சட்டம், எப்படி பொது சிவில் சட்டம் ஆகும்?

பொது சிவில் சட்டத்தை முஸ்லீம் தனிச் சட்ட வாரியம் தனது கடுமையான எதிர்ப்பை 2023 ஆம் ஆண்டே சொல்லியது. உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோவில் கூடிய இந்த சட்டவாரிய உறுப்பினர்கள், மத்திய சட்ட ஆணையத்துக்கு விரிவான கடிதத்தை அனுப்பினார்கள். சிறுபான்மையினரின் உரிமையில் இந்தச் சட்டம் தலையிடுகிறது என்று சொன்னார்கள். சீக்கியர்களின் சிரோமணி அகாலி தளம் கட்சியின் நிர்வாகிகள் கூட்டம் இதனை எதிர்த்துள்ளது. ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட பழங்குடி அமைப்பினர் சேர்ந்து எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்கள். காசி ஹில்ஸ் என்ற தன்னாட்சி பெற்ற மாவட்டக் கவுன்சில் இதனை எதிர்த்துள்ளது. காசி சமூகத்தின் பழக்க வழக்கங்கள் பாதிக்கப்படும் என்கிறார்கள் இவர்கள். அரசியலமைப்பின் ஆறாவது அட்டவணையில் சிறப்பு சலுகை பெற்றிருக்கும் சமூகம் இது.

2023 ஆம் ஆண்டு இந்திய சட்ட ஆணையத்தின் தலைவர் மாண்புமிகு நீதியரசர் ரிதுராஜ் அவஸ்திக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விரிவான கடிதத்தை எழுதினார்கள். பொது சிவில் சட்டம் கூடாது என்பதற்கு அதில் வலுவான வாதங்களை வைத்துள்ளார்கள்.

- **"ஒருவர், தான்விரும்பும் மதத்தைப் பின்பற்றுவதற்கும், கடைப்பிடிப்பதற்கும், பரப்புவதற்குமான உரிமையை" இந்திய அரசியலமைப்பு சட்டம் உறுதி செய்துள்ளது. அதனை பொது சிவில் சட்டம் மீறுகிறது.**
- **ஒரே மதத்தைப் பின்பற்றும் மக்களிடையே கூட, பழக்கவழக்கங்களும், நம்பிக்கைகளும் இடத்திற்கு இடம் மற்றும் வட்டாரத்திற்கு வட்டாரம் வேறுபடும் நிலையில், அவர்களிடையே ஒருமித்த கருத்தை எட்டாமல் அத்தகைய ஒப்புதல் சாத்தியமில்லை.**
- **பழங்குடியினர் உட்பட சிறுபான்மையினரின் தனித்துவமான மத, கலாச்சார அடையாளத்தை அழித்து, செயற்கையாக ஒரேமாதிரியான பெரும்பான்மை சமூகத்தை உருவாக்குவதற்கான முயற்சி இது.**
- **பழங்குடி சமூகங்கள் உட்பட பல்வேறு சமூகங்களின் தனித்துவமான மரபுகள், நடைமுறைகள் மற்றும் தனிப்பட்ட சட்டங்களை மதித்து பாதுகாப்பது முக்கியம்.**
- **இது மத விவகாரங்களில் ஒன்றிய அரசின் அத்துமீறலாகவே கருதப்படும்.**
- **இந்த சட்டம் பல்வேறு மத சமூகங்களிடையே ஆழமான பிளவுகளையும் சமூக அமைதியின்மையையும் உருவாக்கும்.**
- **இது முரண்பாடுகளை உருவாக்கி பகைமையை வளர்க்கக்கூடியது.**
- **பழங்குடி சமூகத்தை இது அதிகமாக பாதிக்கும்.**
- **அனைவருக்கும் பொதுவான நடைமுறையானது ஏற்றத்தாழ்வுகளை அதிகரிக்கும்.**
- **நமது நாட்டின் பலம், அதன் பன்முகத்தன்மையில் உள்ளதாகவும், பொது சிவில் சட்டத்தின் மூலம் அதை ஒருமுகப்படுத்த முயற்சிப்பதை விட, நாம் நமது பன்முகத்தன்மையை நிலைநிறுத்திக் கொண்டாட வேண்டும்.** என்று அந்தக் கடிதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு உள்ளார்கள். இதே போல் பல மாநில முதலமைச்சர்களும் எதிர்ப்பு தெரிவித்தார்கள். பா.ஜ.க. ஆளும் மாநில முதலமைச்சர்கள் சிலரும் அப்போதே எதிர்ப்பை பதிவு செய்தார்கள். அனைத்து மாநிலங்களிலும் இது உள்நாட்டு குழப்பத்தை ஏற்படுத்தும்.

எனவே, பொது சிவில் சட்டத்தை அமல்படுத்துவோம் என்ற வாக்குறுதியை பா.ஜ.க. திரும்பப் பெற வேண்டும்.

உதகை சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் உயிலட்டி பி. ராமச்சந்திரன் அவர்களை ஆதரித்து நஞ்சநாடு பகுதி பொதுமக்களிடம் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. வாக்குகள் சேகரித்தார். இக்கூட்டத்தில் நீலகிரி மாவட்ட மதசார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சித் தலைவர்கள், கழக நிர்வாகிகள், செயல்வீரர்கள் பெருந்திரளாகக் கலந்துகொண்டனர்.

பொன்னமராவதியில் கிராமம், கிராமமாகச் சென்று

கழக வேட்பாளர்-அமைச்சர் எஸ்.ரகுபதி வாக்கு சேகரிப்பு!

புதுக்கோட்டை, ஏப். 14 - புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் பொன்னமராவதியில் கிராமம், கிராமமாக சென்று பொதுமக்களிடம் அமைச்சர் எஸ்.ரகுபதி வாக்கு சேகரித்தார்.

திருமயம் தொகுதி கழக வெற்றி வேட்பாளர், அமைச்சர் எஸ்.ரகுபதி பொன்னமராவதி ஒன்றியம் திருக்களம்பூரில் பொதுமக்களிடம் வாக்கு சேகரித்து பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

அப்போது அவர் பேசியதாவது:

கடந்த 5 ஆண்டு கால தி.மு.க. ஆட்சியில் திருமயம் தொகுதியில் பல்வேறு சாதனைகள் ஆற்றியுள்ளோம். இந்தியாவிலேயே முன் மாதிரி மாநிலமாக தமிழகம் இருப்பதற்கு காரணம் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் கொண்டு வந்த திட்டங்கள் தான். திருமயம் சட்டமன்ற தொகுதி வளர்ச்சியின் பாதையில் உயர்ந்து உள்ளது. அதுபோல தி.மு.க. ஆட்சியில் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களுக்கு முன்னோடியாக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப் பட்டுள்ளது. என்னை . தொடர்ந்து தொகுதியில் பணியாற்றிட ஆதரியுங்கள் என்றார்.

தொடர்ந்து கருப்புகுடி, வார்ப்பட்டு, வேந்தன்பட்டி உள்ளிட்ட 44 கிராமங்களில் அமைச்சர் எஸ். ரகுபதி வாக்கு சேகரித்து பிரச்சாரம் மேற்கொண்டார். இந்நிகழ்வுகளில் ஒன்றியச் செயலாளர் அ. அடைக்கலமணி, பொன்னமராவதி நகர செயலாளர் அ.அழகப்பன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எஸ்.ஜெயராமன், காங்கிரஸ் வட்டார தலைவர் கிரிதரன், நகர காங்கிரஸ் தலைவர் பொறியாளர் பழனியப்பன், இந்திய கம்யூனிஸ்ட் ஒன்றிய செயலாளர் ஏனாதி ராசு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு ஒன்றிய செயலாளர் பக்ருதீன், விடுதலைச் சிறுத்தை கள் கட்சி மாவட்ட செயலாளர் திலீபன் ராஜா, தே.மு.தி.க.ஒன்றிய செயலாளர் பிரகாஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

பா.ஜ.க, தமிழகத்திற்கு என்ன வளர்ச்சியை தந்துள்ளது! 'திராவிட மாடல்' ஆட்சியில்தான்

தமிழ்நாடு பொருளாதார வளர்ச்சியில் இரட்டை இலக்கை எட்டியுள்ளது!

கோவையில் வி.செந்தில்பாலாஜி பேட்டி!

கோவை, ஏப். 14 - திராவிட முன்னேற்றக் கழகத் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் நல்லாசியுடன் தி.மு.கழகத்தின் சார்பில் போட்டியிடும் கோவை தெற்கு சட்டமன்ற தொகுதி வேட்பாளர், கழக மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி கோவை தெற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கோவையின்

முக்கியப் பகுதிகளான காந்திபுரம் மற்றும் ராமநாதபுரம் பகுதிகளில் உள்ள பொது மக்களிடம் காலை முதல் இரவு வரை உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். பொதுமக்கள் அனைவரும் மன மகிழ்ச்சியுடன் ஆரத்தி எடுத்து சிறப்பான வரவேற்பளித்தனர்.

அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது : கோவை தெற்கு சட்டமன்ற தொகுதியில் உள்ள அனைத்து வீதிகள் மற்றும் இல்லங்களுக்கு நேரில் சென்று வாக்காளர்களைச் சந்திக்கும் முதற் கட்ட தேர்தல் பணிகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளோம். இரண்டாவது முறையாக வார்டு வாரியாகச் சென்று வாக்காளர்களைச் சந்திக்கும் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன, நாங்கள் செல்லும் இடங்களில் எல்லாம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு

மக்கள் அமோக ஆதரவை வழங்கி வருகின்றனர். பொதுமக்கள் அனைவரும் மன மகிழ்ச்சியுடன் ஆரத்தி எடுத்தும், மலர் தூவியும் அளிக்கும் வரவேற்பு, எங்களின் வெற்றிப் பயணத்தை உறுதி செய்கிறது. எந்த இடத்திலும் கூட்டம் குறையவில்லை. மாறாக, மக்கள் மிகுந்த எழுச்சியுடன் எங்களை வரவேற்கின்றனர் என்றார்.

ஒன்றிய பா.ஜக. அரசு கடந்த 12 ஆண்டுகளாக கோவை மாவட்டத்திற்கு என்ன திட்டங்களைக் கொண்டு வந்தது என்பதைப் பட்டியல் இடமுடியுமா? எதுவும் செய்யாமல் 2 நாட்கள் முகாமிட்டு ஒன்றிய அமைச்சர் பியூஸ் கோயல் பிரச்சாரம் செய்து வருகிறார். பா.ஜ.கவும் அ.தி.மு.க.வும் இணைந்து ஆட்சி செய்தபோது தமிழகத்திற்கு என்ன வளர்ச்சியைத்தந்தார்கள்.

தமிழகம் இன்று பொருளாதார வளர்ச்சியில் இரட்டை இலக்கை எட்டியுள்ளது, காரணம் திராவிட மாடல் ஆட்சி தான். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட முன்னேற்ற கழக அரசு பொறுப்பேற்ற பிறகு, கோவை விமான நிலைய விரிவாக்கத்திற்காக ரூ.1,352 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் ஒன்றிய அரசு விமான நிலையத்தில் எந்த பணியையும் தொடங்கவில்லை, மெட்ரோ ரயில் திட்டத்திற்கு ஒன்றிய அரசு இன்னும் ஒப்புதல் அளிக்கவில்லை. கோவையை விடக்குறைந்த மக்கள் தொகை கொண்ட நகரங்களுக்கு அனுமதி வழங்கி உள்ளது.

இந்த 5 ஆண்டுகளில் கோவைக்கு வரலாற்று சிறப்பு மிக்க திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி இருக்கிறார், மகளிர், இளைஞர் என ஒட்டு மொத்தமாக அனைத்து தரப்பினருக்கும் பயன்பெறும் வகையில் முதல மைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை வழங்கி உள்ளார்.

கோவை மாவட்டத்தில் 10 சட்டமன்றத் தொகுதிகளிலும் எதிர்க்கட்சியினர் இருந்தாலும் கூட கோவைக்கு அதிகதிட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தந்துள்ளார். அதே போல அதிக முறை சுற்றுபயணம் மேற்கொண்ட முதல் மாவட்டம் கோவை என பெருமை சேர்த்துள்ளார்.

திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளால் கோவையில் உள்ள 10 தொகுதிகளிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி மகத்தான வெற்றி பெறும் என்று அவர் கூறினார்.

சேலம் வடக்கு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர். மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் இரா. இராஜேந்திரன் பால் மார்க்கெட் சாலையோர வியாபாரிகளிடம் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் கூட்டணி கட்சி நிர்வாகிகள் இருந்தனர்.

தர்மபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி வேட்பாளராக முனைவர் பி.பழனியப்பன் போட்டியிடுகிறார் அவர் பையர்நத்தம் பூதநத்தம் மெணசி ஆகிய ஊராட்சிகளில் உள்ள கிராமங்களில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார் . அப்போது வயல்வெளியில் வேலை செய்த பெண்களிடம் சென்று கழக அரசின் சாதனைகள் அடங்கிய துண்டு பிரசுரங்களை வழங்கி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார் உடன் தேர்தல் பார்வையாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி,ஒன்றிய செயலாளர் பி.எஸ்.சரவணன் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்.

குன்னூரில் நடைபெற்ற பூ குண்ட திருவிழாவில் குன்னூர் சட்டமன்றத் தொகுதியின் தி.மு.க. வெற்றி வேட்பாளர் கே.எம்.ராஜு கலந்து கொண்டு பொதுமக்களிடையே வாக்குகள் சேகரித்தார்.